குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை
முன்னிலை : திருமதி. M.M.J. உம்முல் பரிதா, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை.
2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 11 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் புதன்கிழமை

C.N.R.No.TNMY02-000214-2021

D.V.C.No. 43/2021

ஐஸ்வர்யா, வயது 24/2021
க/பெ. நடராஜ சுந்தரம்,
த/பெ. சீனிவாசன்,
ஆதி நகர், ராஜாஜி கிராஸ் தெரு,
கிழக்கு தாம்பரம், சென்னை.
(தற்போது)
வ.ஊ.சி தெரு, கூறைநாடு,
மயிலாடுதுறை. ........மனுதாரர்

**// எதிர் //**

1) நடராஜ சுந்தரம், 32/2021
த/பெ. கலியமூர்த்தி,

2) புஷ்பலதா, 53/2021
க/பெ. கலியமூர்த்தி,
(மேற்கண்ட இருவரும்)
366 ஏ, கம்பன் நகர், பாதரக்குடி,
விளந்திடசமுத்திரம், சீர்காழி,
மயிலாடுதுறை. ........ எதிர்மனுதாரர்கள்

இந்த மனு இந்நீதிமன்றம் முன்பாக 11.02.2026 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சேயோன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதத்தை பரிசீலித்தும் ஆவணங்களைப் பரீசிலித்தும், இதுநாள்வரை இந்தவழக்கு இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:46:59 +0530

**// உத்தரவு//**

மனுதாரர் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005, சட்டப்பிரிவுகள் 19, 20, 22ன் கீழ் உறைவிடம், பணஉதவி மற்றும் இழப்பீடு கட்டளை கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.**<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

2.1. மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் 28.09.2020ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது மனுதாரருக்கு 10 பவுன் நகைகளும், 1ம் எதிர்மனுதாரருக்கு 2 பவுன் நகையும், ரூ.2,00,000/–த்திற்கு சீர் சாமான்களும், திருமண செலவாக ரூ.5,00,000/– செலவு செய்து திருமணத்தை நடத்தி வைத்தனர். திருமணத்தின்போது மனுதாரருக்கு போட்ட நகைகள் மற்றும் சீர்சாமான்கள் அனைத்தும் எதிர்மனுதாரர்கள் வசமே உள்ளது.

2.2. 1ம் எதிர்மனுதாரர் மும்பையில் நாதஸ்வரம் மற்றும் சாக்ஸபோன் கச்சேரிகள் நடத்தி வருபவர். திருமணத்திற்கு பிறகு மும்பை சென்றதும் 1ம் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு, ஹான்ஸ் போட்டுக்கொண்டு வயது முதிர்ந்த பெண்களோடு தகாத பழக்கம் வைத்துக்கொண்டு, பல பெண்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு மனுதாரரையும், மனுதாரர் குடும்பத்தையும் ஏமாற்றி திருமணம் செய்து கொண்டார். 2வது எதிர்மனுதாரரின் தோழிகளோடு தொடர்பு வைத்துக்கொண்டு மிக அசிங்கமாக நடந்து கொள்கிறார். 2வது எதிர்மனுதாரருக்கு தெரிந்தும் அவர் எதையும் கண்டுகொள்ளாமல் எனது மகன் அப்படித்தான் இருப்பான். உனக்கு என்ன நடந்தாலும் கேள்வி கேட்க ஆளில்லாத காரணத்தினால்தான் உன்னை எனது மகனுக்கு திருமணம் செய்து வைத்தேன். நீ என்னவோ 100 பவுன் நகை போட்டுட்டு வந்த மாதிரி கேள்வி கேட்கிற என்று பேசி மனுதாரரை ரத்தகாயம் ஏற்படும்வரை அடித்து துன்புறுத்தினார்.

2.3. மனுதாரர் ஒரு ஐ.டி கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். மனுதாரருடைய ATM கார்டை வைத்துக்கொண்டு சம்பளப் பணம் முழுவதையும் எதிர்மனுதாரர்கள் செலவு செய்து வந்தார்கள். மனுதாரருக்கு சரியான சாப்பாடும் போடுவது கூட கிடையாது, செலவுக்கு பணமும் கொடுப்பதும் கிடையாது. மனுதாரரின் ATM, PAN கார்டு, ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, படிப்பு சான்றிதழ்கள் அனைத்தையும் 1ம் எதிர்மனுதாரரே பிடுங்கி வைத்துக்கொண்டுள்ளார். எதிர்மனுதாரர்கள் மற்றும் அவரது தோழிகள் எல்லோரும் சேர்ந்து எப்போது பார்த்தாலும் தம்பதியர்களின் தாம்பத்திய வாழ்க்கையை பற்றி மிகவும் கொச்சையாக பேசுவதையே வாடிக்கையாக வைத்திருந்தனர். இதுபற்றி 1ம் எதிர்மனுதாரரிடம் கேட்டால் 1ம் எதிர்மனுதாரர் "நான் 12 வயதிலிருந்தே இப்படித்தான் இருக்கிறேன். எனது அம்மாவும் என்னை ஒன்றும் சொன்னதில்லை என்றும் எப்போது பார்த்தாலும் வீடியோ காலில் நிர்வாணமாக நின்று

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:47:28 +0530

கொண்டு மற்ற பெண்களுடன் அசிங்கமான முறையில் பேசிக்கொண்டிருப்பார்". மனுதாரர் அவரது குடும்பத்தில் யாருடனும் பேசக்கூடாது என்றும், அப்படி பேசி யாராவது மும்பைக்கு வந்தால் இங்கு நல்ல விலைக்கு விற்றுவிடுவேன் என பேசி மனுதாரரை பயமுறுத்தி தற்கொலைக்கு தூண்டினார்கள்.

2.4. 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர் உடலமைப்பை கேவலமாக வர்ணித்து இவ முஞ்சியை பார்த்தா உனக்கு எப்படி இவளோடு சந்தோஷமாக வாழத்தோணும், அதனாலதான் நான் உனக்கு பிடிச்ச பொண்ணா கொண்டு வந்து உன்னோடு விடுறேன். நாம பிறந்த ஊருல உனக்கு ஒரு கல்யாணம் பண்ணலன்னு யாரும் சொல்லக்கூடாதுங்கற காரணத்தினாலதான் இந்த மூஞ்சிய உனக்கு கல்யாணம் பண்ணி வைச்சேன். இத கொண்டுபோய் எவண்ட வித்தாலும் வாங்கமாட்டான் என கேவலமாக பேசி மனுதாரர் வாழ்க்கையை நாசம் செய்தார். ஒரு நாள் எதிர்மனுதாரர்கள் இருவரும் மனுதாரரை தனியாக மும்பையில் விட்டு விட்டு செலவுக்கு கூட பணம் கொடுக்காமல் வீட்டில் உள்ள வளர்ப்பு நாயோடு குடும்பம் நடத்து என அசிங்கமாக பேசிவிட்டு சீர்காழிக்கு வந்துவிட்டனர். கடந்த செப்டம்பர் 2021ல் மனுதாரர் மும்பையிலிருந்து சென்னை வந்தார். சீர்காழி விளந்திட சமுத்திரத்தில் சுமார் ஒரு மாத காலம் 1ம் எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்தினார். எதிர்மனுதாரர்கள் மனுதாரரை பூட்டிய அறைக்குள் வைத்து அடித்து கொடுமைப்படுத்தி வெளியில் விடாமல் வைத்திருந்ததால் மனுதாரர் கடந்த செப்படம்பர் கடைசி வாரத்தில் சீர்காழி விளந்திடசமுத்திரத்திலிருந்து தப்பித்து வந்து தற்பொழுது எனது உறவினர் வீடான மயிலாடுதுறை, கூறைநாடு, வ.ஊ.சி தெருவில் வசித்து வருகிறார்.

2.5. எதிர்மனுதாரர் நாதஸ்வரம் மற்றும் சாக்ஸபோன் கச்சேரிகளில் வாசித்து மாதம் ரூ.1,00,000/- சம்பாதித்து வருகிறார். மேலும், மும்பை தாராவியில் 5 வீடுகளும், டோம்புவிளியில் சாயிஷ் சாவித்திரி வில்லா என்ற ஒரு அப்பார்ட்மெண்டும் சொந்தமாக உள்ளது. அதனை வாடகைக்கு விட்டு மாதம் ரூ.80,000/- சம்பாதித்து வருகிறார். ரூ.75,00,000/- மதிப்புள்ள சொந்த மாடி வீடு ஒன்று சீர்காழியில் உள்ளது. அதில் இரண்டு வீடுகள் உள்ளது. அதன் மூலம் வாடகையாக ரூ.20,000/- சம்பாதித்து வருகிறார். மேலும், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் அருகில் ரூபாய் ஒன்றை கோடி மதிப்புள்ள 7000 சதுர அடி காலி மனை ஒன்று உள்ளது. எனவே, மனுதாரர் எதிர்மனுதாரர்களிடமிருந்து குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:47:38 +0530

3. எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அந்த அறிவிப்பானது அவர்களுக்கு சார்வு ஆகாமல் Addressee left without instruction என்று பலமுறை திருப்பப்பட்டுள்ளதால் மனுதாரர் நாளிதழில் அறிவிப்பு வெளியிடும் படி இந்நீதிமன்றம் உத்தரவிட்டதன் பேரில் மனுதாரர் நாளிதழில் அறிவிப்பு கொடுக்கப்பட்டும், எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக 07.01.2026 ம் தேதியன்று ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**<u>4. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை</u>**

1. மனுதாரர் எதிர்மனுதாரர்களால் குடும்ப வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா?
2. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் பிரிவு 19 ன் கீழான உறைவிட ஆணை வழங்க வேண்டுமா?
3. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் பிரிவு 20 குடும்ப வன்முறை சட்டப்படி பணஉதவி தொகை கொடுக்க கடமைப்பட்டவரா?
4. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் பிரிவு 22 ன் படி இழப்பீடு வழங்க வேண்டுமா?
5. வேறு என்ன பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது.

5. மனுதாரர் தரப்பில் மனுதாரர் திருமதி. ஐஸ்வர்யா ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

**<u>பிரச்சனை 1.</u>**

6. மனுதாரர் தனது மனுவில், மனுதாரருக்கு திருமணத்தின் போது 10 பவுன் நகைகளும், 1ம் எதிர்மனுதாரருக்கு 2 பவுன் நகையும், ரூ.2,00,000/-த்திற்கு சீர் சாமான்களும், திருமண செலவாக ரூ.5,00,000/- செலவு செய்து திருமணத்தை நடத்தி வைத்ததாகவும், திருமணத்திற்கு பிறகு மும்பை சென்றதும் 1ம் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு, ஹான்ஸ் போட்டுக்கொண்டு வயது முதிர்ந்த பெண்களோடு தகாத பழக்கம் வைத்துக்கொண்டுள்ளதாகவும், மனுதாரரை ஏமாற்றி திருமணம் செய்து கொண்டதாகவும், எதிர்மனுதாரர்கள் மற்றும் அவரது தோழிகள் எல்லோரும் சேர்ந்து எப்போது பார்த்தாலும் தம்பதியர்களின் தாம்பத்திய வாழ்க்கையை பற்றி மிகவும் கொச்சையாக பேசுவதையே வாடிக்கையாக வைத்திருந்ததாகவும், 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரை கண்டிக்காமல் எனது மகன் அப்படி தான் இருப்பான் என்று எகத்தாளமாக பேசி மனுதாரரை அடித்து துன்புறுத்தியதாகவும், 1ம் எதிர்மனுதாரர் வீடியோ காலில் நிர்வாணமாக நின்று கொண்டு மற்ற பெண்களுடன் அசிங்கமான முறையில் பேசிக்கொண்டிருந்ததாகவும், மனுதாரர் அவரது குடும்பத்தில் யாருடனும் பேசக்கூடாது என்றும், அப்படி பேசி யாராவது மும்பைக்கு வந்தால் இங்கு நல்ல விலைக்கு விற்றுவிடுவேன் என பேசி மனுதாரரை பயமுறுத்தி தற்கொலைக்கு தூண்டியதாகவும், எதிர்மனுதாரர்கள் இருவரும் மனுதாரரை தனியாக மும்பையில்

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.25 19:47:52 +0530

விட்டு விட்டு செலவுக்கு கூட பணம் கொடுக்காமல் வீட்டில் உள்ள வளர்ப்பு நாயோடு குடும்பம் நடத்து என அசிங்கமாக பேசிவிட்டு சீர்காழிக்கு வந்துவிட்டதாகவும், அதன் பிறகு மனுதாரர் அங்கிருந்து செப்டம்பர் 2021ல் சென்னைக்கு வந்துவிட்டதாகவும், அதன் பின்பு எதிர்மனுதாரர்களுடன் மனுதாரரின் உறவினர்கள் சமாதானமாக பேசி 1ம் எதிர்மனுதாரருடன் 1 மாதம் குடும்பம் நடத்தியதாகவும், எதிர்மனுதாரர்கள் மனுதாரரை பூட்டிய அறைக்குள் வைத்து அடித்து கொடுமைப்படுத்தி வெளியில் விடாமல் வைத்திருந்ததால் அங்கிருந்து தப்பித்து வந்து மனுதாரர் கடந்த செப்படம்பர் கடைசி வாரத்தில் சீர்காழி விளந்திடசமுத்திரத்திலிருந்து மனுதாரர் உறவினர் வீடான மயிலாடுதுறை, கூறைநாடு, வ.ஊ.சி தெருவில் வசித்து வருவதாகவும், எதிர்மனுதாரர் நாதஸ்வரம் மற்றும் சாக்ஸபோன் கச்சேரிகளில் வாசித்து மாதம் ரூ.1,00,000/– சம்பாதித்து வருகிறார். மேலும், மும்பை தாராவியில் 5 வீடுகளும், டோம்புவிளியில் சாயிஷ் சாவித்திரி வில்லா என்ற ஒரு அப்பார்ட்மெண்டை வாடகைக்கு விட்டு மாதம் ரூ.80,000/–மும், ரூ.75,00,000/– மதிப்புள்ள சொந்த மாடி வீட்டின் வாடகையாக ரூ.20,000/–மும் சம்பாதித்து வருவதாகவும், மேலும், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் அருகில் ரூபாய் ஒன்றை கோடி மதிப்புள்ள 7000 சதுர அடி காலி மனை ஒன்று உள்ளதாகவும் கூறியுள்ளார்.

7. மனுதாரர் ம.சா.ஆ.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆக 28.09.2020ம் தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் கூறி இருக்கும் சங்கதிகளை உறுதிப்படுத்தும் விதத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தபோது மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் 28.09.2020ம் தேதி திருமணம் நடைபெற்றுள்ளது என்பது தெரிய வருகிறது. எதிர்மனுதாரர்கள் முன்னிலையாகி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தி மனுதாரர் வழக்கை மறுக்கவில்லை. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர்கள் எவ்வித பதிலும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதால் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டதாகவே இந்நீதிமன்றம் அனுமானிக்கின்றது. எனவே, மனுதாரர் தனது வழக்கை தகுந்த சாட்சியங்களின் மூலமாக நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரரை எதிர்மனுதாரர்கள் சரிவர பராமரிக்காமல் மனுதாரரை அடித்து உடல்ரீதியாகவும், மனரீதியாகவும், கொடுமைப்படுத்தியும், மனுதாரருக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்கி கொடுக்காமலும் செலவுக்கு பணம் கொடுக்காமலும் இருந்து வந்துள்ளதால் மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் பொருளாதார ரீதியாகவும், வன்முறை இழைத்து வந்துள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் குடும்ப வன்முறை இழைத்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:48:07 +0530

<u>பிரச்சனை 2</u>

8. மனுதாரர் பிரிவு 19 ன் கீழ் உறைவிடக் கட்டளை அல்லது அதற்கான வாடகை செலுத்த வேண்டும் என கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் மனுதாரர் தற்போது உறவினர் வீட்டில் வசித்து வருவதாக கூறியுள்ளார். எனவே, மனுதாரர் தற்போது தனது உறவினர் வீட்டில் வசித்து வருவதாலும், எதிர்மனுதாரர்கள் மனுதாரரை பல வகையில் கொடுமைப்படுத்தி வந்துள்ளதால் 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் மனுதாரர் சென்று வாழ்ந்தால் மனுதாரரின் உயிருக்கு உத்தரவாதம் இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், மனுதாரரை மனைவி என்ற முறையில் பராமரிக்க 1ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டுள்ளதால் 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் மனுதாரர் வாழ்ந்து வந்த அதே அளவில் வேறு இருப்பிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும், அதற்கு வாடகை செலுத்த வேண்டும் என்ற பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும், 1ம் எதிர்னுதாரர் மனுதாரருக்குரிய இருப்பிட வசதியை ஏற்படுத்திக்கொடுக்க தவறும்போது மாற்று உறைவிடத்திற்கான வாடகையை 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்தி வைக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிட்டு மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து மாற்று உறைவிடத்திற்கான வாடகை பெற உரிமையுடையவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, பிரிவு 19 ன் கீழ் மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து மாற்று உறைவிடத்திற்கான வாடகை ரூ.5,000/- கிடைக்கதக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

<u>பிரச்சனை 3</u>

9. மனுதாரர் பிரிவு 20ன் கீழ் பண உதவி தொகை கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவில், மனுதாரருக்கு உணவு, உடை போன்றவற்றிற்கு மாதம் ரூ.50,000/- ஜீவனாம்ச தொகை 1ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டுமென கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவிலும், நிரூபண வாக்குமூலுத்திலும், எதிர்மனுதாரர் நாதஸ்வரம் மற்றும் சாக்ஸபோன் கச்சேரிகளில் வாசித்து மாதம் ரூ.1,00,000/- சம்பாதித்து வருகிறார். மேலும், மும்பை தாராவியில் 5 வீடுகளும், டோம்புவிளியில் சாயிஷ் சாவித்திரி வில்லா என்ற ஒரு அப்பார்ட்மெண்டும் சொந்தமாக உள்ளது. அதனை வாடகைக்கு விட்டு மாதம் ரூ.80,000/- சம்பாதித்து வருகிறார். ரூ.75,00,000/- மதிப்புள்ள சொந்த மாடி வீடு ஒன்று சீர்காழியில் உள்ளது. அதில் இரண்டு வீடுகள் உள்ளது. அதன் மூலம் வாடகையாக ரூ.20,000/- சம்பாதித்து வருகிறார். மேலும், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் அருகில் ரூபாய் ஒன்றை கோடி மதிப்புள்ள 7000 சதுர அடி காலி மனை ஒன்று உள்ளது என்று கூறியுள்ளார். மேலும் அதற்கான சான்றாவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மனுதாரரின் மனு மற்றும் சாட்சியத்தை ஒரு சேர பரிசீலனை செய்கையில் 1ம் எதிர்மனுதாரர் இதுநாள்வரை மனுதாரரை பராமரிக்காமல் இருந்து வருகிறார் என்பதை அறிய முடிகிறது. எனவே, 1ம் எதிர்மனுதாரரே மனுதாரரை மனைவி என்ற முறையில் பராமரிக்க

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:48:16 +0530

கடமைப்பட்டவராவார். மேலும், மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர் அவர் வாழும் வாழ்க்கை சூழ்நிலை மற்றும் தரத்திற்கு ஏற்ப பராமரிக்க வேண்டியது அவருடைய கடமையாகும். எனவே மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து பண உதவி தொகை பெற உரிமையுடையவர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, தற்போதைய விலைவாசி, மருத்துவ செலவுகள், இதர செலவுகள், வாழ்க்கை சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற்கொண்டு பார்க்கும்போது 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு பண உதவி தொகையாக மாதம் ரூ.15,000/– வழங்கவேண்டும் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>**பிரச்சனை 4**</u>

10. மனுதாரர் பிரிவு 22ன் கீழ் ரூ.5,00,000/– இழப்பீடு 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என கோரியுள்ளார். ஆனால் அவ்வளவு பெரிய தொகையை இழப்பீடாக பெறுவதற்கு போதிய காரணங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. இருப்பினும் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை கருத்தில் கொண்டும், மனுதாரரின் சங்கதிகளை கருத்தில் கொண்டும், 1ம் எதிர்மனுதாரரின் வருமானத்தை கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.30,000/–வழங்க உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

11. **முடிவில், இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

1) மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் பிரிவு 19ன் கீழ் மாற்று உறைவிடத்திற்கான வாடகை மாதம் ரூ.5,000/– வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிட்டு மாற்று உறைவிடத்திற்கான வாடகை தொகையினை ஒவ்வொரு மாதமும் முதல் 5 தேதிக்குள் கொடுக்க வேண்டியது எனவும் இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

2) மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் பிரிவு 20ன் கீழ் ரூ.15,000/– பணஉதவி தொகை வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேற்படி, மனுதாரருக்கு அவர் வாழ்நாள் முடியும் வரையில் வாழ்க்கை பொருளுதவி தொகையை கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிட்டு பணஉதவி தொகையினை ஒவ்வொரு மாதமும் முதல் 5 தேதிக்குள் கொடுக்க வேண்டியது எனவும் இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:48:29 +0530

3) மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையாக ரூ.30,000/– வழங்கவேண்டும் என இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்கவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

4) இருதரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு அவர்களது செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:48:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

ம.சா.1 – திருமதி. ஐஸ்வர்யா

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

ம.சா.ஆ.1 – 28.09.2020ம் தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>** இல்லை

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:49:03 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.